# தோழர் ஸ்டாலின் ஜகதீஸ் அவர்கள் உடல் நிலை.

## இன்று (5-6-38) 36-ம் நாள்:

நமது (நிருபர்)

சென்னை, ஜூன், 5.

ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்கள் உடல்நிலை கவலைக்கிடமான நிலையில் இருக்கிறது. அவருக்

---

# ஸ்டாலின் ஜெகதீசன்

## உண்ணாவிரதம் இன்றைக்கு

# 37ம் நாள்

---

சே, இன்னும் நாலைந்து நாட்கள் வரையில் உயிர் தாங்குமா என்கிற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. நேற்று இரவு, என்றும் இல்லாதபடி மயக்கமும் களைப்பும் ஏற்பட்டதோடு வயிற்றில் சிறிது வலியும் ஏற்பட்டது. தண்ணீர் குடித்து வந்தவர் நேற்று இரவு முதல் தண்ணீர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், ஊக்கம் மேன் மேலும் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கூட்டத்துக்கும் காரில்போய் சற்றுநேரம் இருந்துவிட்டு வருகிறார். கூட்டங்களில் பேச முடியாதபடியால் இரண்டொரு விஷயங்கள் மட்டுப் கடிதாசியில் எழுதிப்படிக்கச்செய்கிறார். நேற்றுஇரவு அவருக்கு உண்டான மயக்கமும் வயிற்றுவலியும்கடைசிமுடிவாக இருக்குமோ என்ற பயம் உண்டாயிற்று நல்லவேளையாக ஒன்றும் நேரவில்லை. ஆனால், தேக நிலையை நோக்கும்போது சில நாளாவது காலந்தள்ள முடியா என்கிற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அறிவும் ஞாபகசக்தியும் சற்றும் குறையவில்லை. அவருடைய ஊக்கந்தான் ஆச்சரியப்படும்படி நாளுக்குநாள் வளர்கிறது.